07.11.2023 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 68/2022) ராஜா.

| | |
|---|---|
| 1 | 3 ம்வாதியின் வாரீசு சான்றிதழ் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் தற்போது சிவகாசியில் வசித்து வருகிறேன். வழக்கின் 1 ம்வாதி என்னுடைய தாயார் ஆவார். 2 ம்வாதி மீனாட்சி என்னுடைய சகோதரி ஆவார். இவ்வழக்கில் 1 ம்பிரதிவாதி மீனாட்சி என்னுடைய தகப்பனாரின் முதல் மனைவி ஆவார். 01.09.2021 ம்தேதியன்று என்னுடைய தகப்பனார் கோவில்பட்டியில் வைத்து காலம் சென்றுவிட்டார். என்னுடைய தகப்பனாருக்கு வாரீசு சான்றிதழ் கேட்டு நான் தான் விண்ணப்பம் செய்தேன் என்றால் சரிதான்.அந்த மனுவின் விசாரணையில் என்னுடைய தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்ற விவரம்தெரியவந்தது என்றால் சரிதான். 28.11.1991 வருவாய் நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையின் மூலமாக ஒரு நபருக்கு இரண்டு மனைவிகள் இருந்தால் நீதிமன்றத்தின் மூலம் வாரீசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரின் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது 1 ம்வாதியான எனது தாயாருக்கு வாரீசு சான்றிதழ் கேட்டு விண்ணபித்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது பிரிவு 80 சிபிசி.படி அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், வழக்கு உண்மையிக்கு புறம்பாக சங்கதிகளை கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)A.முகமது சாதிக்உசேன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
07.11.2023.